ಮಾರ್ಚ್/ಏಪ್ರಿಲ್ 2025 ರ ಪರೀಕ್ಷೆ-1

**MARCH/APRIL 2025 EXAMINATION-1**

**A**

**CCE RF/RR/ PF/ PR**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12

[ Total No. of Printed Pages : 12

[ ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 45

[ Total No. of Questions : 45

ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : **10-T** **Code No. : 10-T**

ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — **ತಮಿಳು**

# Subject : First Language — TAMIL

**( ಶಾಲಾ ಅಭ್ಯರ್ಥಿ / ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ )**

**( Regular Fresh / Regular Repeater / Private Fresh / Private Repeater )**

ದಿನಾಂಕ : 21. 03. 2025 ] [ Date : 21. 03. 2025

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-00 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-15 ರವರೆಗೆ ] [ Time : 10-00 A.M. to 1-15 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**பொதுவான குறிப்புகள் :**

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது ( Sealed by reverse jacket) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது.** வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் (Admission Ticket) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**

இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. செய்யுளில் இரண்டு சீர்களைக் கொண்டது

(A) குறளடி

(B) அளவடி

(C) நெடிலடி

(D) சிந்தடி

2. செய்யுளைப் பொருளால் அழகுபடப் புனைவது

(A) சொல்லணி (B) பொருளணி

(C) வேற்றுமை அணி (D) பின் வருநிலை அணி

3. பகை நாட்டின் பசுக்களைக் கவர்தல்

(A) வஞ்சி (B) உழிஞை

(C) காஞ்சி (D) வெட்சி

4. வகுப்பு சிரித்தது

(A) பொருளாகுப் பெயர் (B) இடவாகுப் பெயர்

(C) காலவாகுப் பெயர் (D) சினையாகுப் பெயர்

5. நனியுண்டு நனியுண்டு என்பது

(A) அடுக்குத் தொடர் (B) இரட்டைக் கிளவி

(C) அசை (D) விளி

6. ஏரோட்டுவதைவிடச் சிறந்தது இது

(A) விதைத்தல் (B) எருவிடுதல்

(C) களை எடுத்தல் (D) கதிர் அறுத்தல்

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக :** **4 × 1 = 4**

7. பூமியோடு பெயர்த்தெடுத்தான் : இராவணன்

புல்லால் பர்ணசாலை அமைத்தான் : ..........................

8. கம்பராமாயணத்தின் ஆசிரியர் : கம்பர்.

பம்பபாரதத்தின் ஆசிரியர் : ........................... .

9. மற்ற யந்திரங்கள் : இரும்பால் ஆனவை

மனித யந்திரங்கள் : ........................... .

10. உடல் : மண்ணுக்கு

உயிர் கொண்ட : ........................... .

**III. ஒரு தொடரில் விடை தருக :** **7 × 1 = 7**

11. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?

12. இளையான்குடி மாறர் பெரிய இறைகூடையில் எதனைக் கொணர்ந்தார் ?

13. பாணன் தான் கொண்டுவந்த பரிசுப் பொருள் பற்றி முதலில் கூறிய சொல் யாது ?

14. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு என்ன ?

15. எதிர் காலத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருப்பவர் யார் ?

16. C.F.C என்றால் என்ன ?

17. தூறு என்றால் என்ன ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

19. பிரமன் இராவணனுக்குக் கொடுத்த சாபம் யாது ?

20. நிலக்கரி தரும் நன்மைகள் யாவை ?

21. 'நீதிசாரம்' என்ற நூல் பற்றி எழுதுக.

22. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

23. வௌவால் குகைகள் எவ்வாறு காட்சி அளிக்கின்றன ?

24. கிராமத்தின் பரம்பரைத் தொழிலாளர்கள் ஏன் கிராமத்தைக் கைவிட்டனர் ?

25. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக.

26. 'அடி என்றால் என்ன'? அதன் வகைகளைக் குறிப்பிடுக.

27. வெண்பாவின் இலக்கணம் யாது ?

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $4 \times 3 = 12$**

28. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார் வடிவில் வந்த சிவனுக்கு அமுது படைக்க சமைப்பதற்காக மேற்கொண்ட செயல்களை விளக்குக.

29. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை எழுதுக.

30. பாரதிதாசன் யாருக்கு என்ன புகழாரம் சூட்டுகிறார் ?

31. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரும்? அதன் விளைவு எது ?

**VI. குறிப்பு வரைக :** **2 × 3 = 6**

32. திருக்குறள்.

33. மகாகவி பாரதியார்.

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :** **1 × 3 = 3**

34. தற்குறிப் பேற்ற அணி.

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **3 × 3 = 9**

35. ''அறத்தான் வருவதே இன்பம்''

36. சரி ... பூமி கோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன ?

37. பாவம் : கொஞ்சம் நேரமாவது அவர்கள் அயர்ந்து தூங்கட்டும்.

**IX. கீழ் வரும் பழமொழியை விளக்குக :** **1 × 3 = 3**

38. ''ஞாயிற்றைக் கைம்மறைப்பார் இல்''.

*அல்லது*

''மின்னுவதெல்லாம் பொன்னல்ல''.

**X. அடிபிறழாமல் எழுதுக :** **1 × 4 = 4**

39. சோதியாய்த் தோன்றும் ..... எனத் தொடங்கும் திருவாசகப் பாடல்.

*அல்லது*

இனிமைத் தமிழ் ..... எனத் தொடங்கும் மொழி வாழ்த்துப் பாடல்.

**XI. எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக :** **2 × 4 = 8**

40. சேதுப்பிள்ளையவர்கள் 'இவர்கள்' கைவண்ணம் இங்குக் கண்டோம் என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்க.

41. இலங்கையில் சீதை இருந்த நிலை பற்றி அனுமான் கூறியவற்றை எழுதுக.

*அல்லது*

தீப்பெட்டி ஆபிஸிற்குக் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி ராஜநாராயணன் கூறியன யாவை ?

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக :** **1 × 4 = 4**

42. பொன்னை எடுத்தும் அன்னத்தைக் காணாதார்
ஆடையை நெய்தும் வெற்றுடம்பாய்
சொன்ன சொல் கேட்பாரும் என் மக்களே
காற்றை உண்பாரும் என் மக்களே.

*அல்லது*

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை யென்று
எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போ மென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

**XIII. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :** **1 × 4 = 4**

43. மனித வாழ்வுக்குத் தேவையானவற்றை அறம், பொருள், இன்பம் எனப் பகுத்துத் தொகுத்துள்ளது வள்ளுவம். காதல் இன்பம்

இன்றேல் மனித வாழ்வு இல்லை என்பது வள்ளுவத்தின் தத்துவம். ஆனால் அதே நேரத்தில் காதல் இன்பமே மனித வாழ்வா ! என்றால் இல்லை என்றே வள்ளுவம் ஐயத்திற்கு இடமில்லாமல் விடையளிக்கும். காதல் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டு மனிதவாழ்வில் நிலைத்த இன்பம், உலகியல் இன்பம், அடிப்படை இன்பம் அறிவியல் இன்பம் பெறவேண்டும். அதுவே முழுமை பெற்ற நிறைந்த வாழ்வென்று வள்ளுவம் வழிகாட்டும்.

**வினாக்கள் :**

a) மனித வாழ்வுக்குத் தேவையை கூறுவது எது ?

b) முழுமை பெற்ற நிறைந்த வாழ்வு எது ?

**XIV. மடல் எழுதுக :** **1 × 5 = 5**

44. உன் பள்ளியில் புத்தக கண்காட்சிக்கு சென்றதை நினைவு கூர்ந்து உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

*அல்லது*

நீ வசிக்கும் பகுதியில் சாலையை சீரமைத்து கொடுக்க நகர ஆணையர்க்கு விண்ணப்பம் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:** **$1 \times 5 = 5$**

45. ''இன்றைய வாழ்வில்'' கைபேசியின் நன்மை தீமைகளை தொகுத்து எழுதுக.

*அல்லது*

''சுற்றுப்புறத் தூய்மை''

DO NOT WRITE ANYTHING HERE